**O.S**.248/2012

**சுந்தர்ராஜன் DW**2

**நாள் :** 05-12-2019

**சாட்சி இன்று ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ..**

**7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ..**

எனக்கு நீதிமன்ற அழைப்பாணை வந்தது. 3 ம் பிரதிவாதிதான் என்னை சாட்சிக்காக அழைத்து வந்தார். 3 ம் பிரதிவாதி எழுதிய விடுதலைப் பத்திரத்தில் நான் சாட்சிக் கையெழுத்து செய்திருக்கிறேன். நிரூபண வாக்குமூல சங்கதிகள் பெரியசாமி சொன்னதன் பேரில் தயார் செய்யப்பட்டது. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 4 ல் விடுதலைப் பத்திரத்திற்கு பின்னிட்டும் லோகநாதன்தான் அவர் பங்கை ஓட்டி வருகிறார் என்று சொல்லியுள்ளேன். தங்கமுத்து என்பவரும் அனுபவிக்கிறார் என்று சொல்லியிருக்கிறேன். எந்த அடிப்படையில் தங்கமுத்து சொத்தை அனுபவித்து வருகிறார் என்று நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 3 ம் பிரதிவாதி விடுதலைப் பத்திரத்தை இரத்து செய்துவிட்டாரா இல்லையா என்று எனக்குத் தெரியாது. தாவா சொத்தை 27.02.2012 ம் தேதி 7 ம் பிரதிவாதி குப்புசாமிக்கு 2 ம் பிரதிவாதி லோகநாதன் கிரையம் கொடுத்ததாக சொல்வது பற்றி எனக்குத் தெரியாது. அதன் பேரில் 7 ம் பிரதிவாதி சொத்தை அனுபவித்து வருவதாக சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. வாதியும், மற்ற பிரதிவாதிகளும் சேர்ந்து தாவா சொத்தை அபகரிக்க வேண்டி தாக்கல் செய்த வழக்கில் நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை .. இல்லை.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை ..**

என்னுடைய நிரூபண வாக்குமூலம் பத்தி 4 ல் நான் லோகநாதன் என்று சொல்லியிருப்பது தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டது. ஆனால் உண்மையில் அவர் பெயர் மோகநாதன்.

**(சாட்சி மேகநாதனைத்தான் தவறுதலாக தட்டச்சு செய்து விட்டதாக சொல்கிறார்).**